புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023 ISSN: 2456-821X

# வேள்பாரி புதினத்தில் கொற்றவை கூத்து

*முனைவர் தா.திருநாவுக்கரசு,*
*இணைப்பேராசிரியர்,*
*தமிழ்த்துறை,*
*காமராஜர் அரசு கலைக் கல்லூரி, சுரண்டை.*

ஆய்வுச் சுருக்கம்

கொற்றவை தெய்வம் தொடக்க காலத்தில் குறிஞ்சிக்குரிய தெய்வமாகவும் பிற்காலத்தில் முற்றிலுமாக பாலைக்குரிய தெய்வமாகவும் மாற்றப்பட்ட நிலையை இலக்கியங்கள் புலப்படுத்துகின்றன. சு.வெங்கடேசன் அவர்களின் வேள்பாரி புதினம் பறம்பு மலையாகிய குறிஞ்சியைத் தலைமையிடமாகக் கொண்டு வாழ்வியலை மேற்கொள்ளும் வேளிர் குலத் தலைவனாகிய பாரியின் கொற்றவை வழிபாடு குறித்து இவ்வாய்வு அமைகின்றது. போருக்கு முன் போரில் வெற்றியைத் தேடத்தர கொற்றவையை வழிபடுதல் மரபாக இருந்தது. வேள்பாரி புதினத்தில் இனக்குழுக்கள் தங்கள் அழிவின் விழிம்பில் நிற்கும் நிலையில் கொற்றவை வழிபாடு நிகழ்த்தும் உருக்கமாக நிலை சுட்டப்பட்டுள்ளன. ஒவ்வொரு இனக்குழுக்களும் சில சடங்குமுறைகள் செய்து கொற்றவையை வழிபட்டு சூளுரை மேற்கொள்ளும் நிலை சுட்டப்பட்டுள்ளது. அத்தகைய கொற்றவை வழிபாடு நிகழ்த்தும் தன்மைகள் குறித்து ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## முன்னுரை

கொற்றவை தெய்வம் சங்க காலம் முதல் போருக்கான தெய்வமாக வழிபட்டு வந்த தன்மைகளைச் சங்க இலக்கியங்கள் சுட்டுகின்றன. போருக்குச் செல்வதற்கு முன் வீரர்கள் கொற்றவையை வழிபட்டு பலி கொடுத்துச் சென்ற செய்திகள் இலக்கியங்களில் இடம்பெறுகின்றன. சு.வெங்கடேசன் அவர்களின் வேள்பாரி புதினம் சங்க இலக்கியத்தில் சுட்டப்படும் பாரியின் முழுமையான ஒரு பிம்பமாக அமைகின்றது. அத்தகைய வேள்பாரி புதினத்தில் இடம்பெறும் கொற்றவை கூத்தின் நிகழ்த்து முறைகள் குறித்து ஆய்வதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.

## குலநாகினி

பறம்பின் நாட்டைச் சூழ்ந்து நாகப்பச்சை வேலி அமைக்கப்பட்டிருக்கும். அதனை மிக நுட்பமாக வளர்க்கும் பேராற்றல் கொண்டவர்கள் பெண்கள். எனவே பறம்பின் முதிய பெண்களின் கூட்டம் அந்த வேலியைப் பாதுகாப்பர். பறம்பின் மாலை நேரங்களில் ஆங்காங்கே விளக்கு ஏற்றுவர். அதற்கான உத்தரவு இடும் உரிமை குலநாகினிக்கு உரியதாகும். குலநாகினி என்பவர் பறம்பின் வயது முதிர்ந்த பெண்ணைக் குறிக்கும் சொல்லாகும். இதனை,

"அதுதான் நாகினிகளின் கூட்டம். அதற்குள்தான் குலநாகினி வந்துகொண்டிருப்பாள். அவள்தான் எங்கள் குலமூதாய். இந்த நாகப்பச்சை வேலியை ஆட்சிசெய்பவள் அவள் தான். பெண்ணால்தான் இவ்வளவு நுட்பமான ஒரு வேலியைக் கட்டியமைத்துக் காப்பாற்ற முடியும். அவர்களின் சொல்கேட்டுத் தாவரங்கள் தழைக்கும், தலையாட்டும்" (ப.138)

என்ற கூற்று தெளிவுறுத்துகின்றது.

*தாய்வழிச் சமூகம்*

*மனிதன் தோன்றிய காலத்தில் தாய்வழிச் சமூகமே வழக்கில் இருந்தது. பெண் தான் குலத்தின் தலைமை ஏற்றாள். கால மாற்றத்தில் எல்லா இனக்குழுக்களும் தாய்வழி மரபை மாற்றி தத்தைவழிச் சமூகமாக மாற்றம் பெற்றன. ஆனால் புறம்பின் முதிய பெண்களே பாரியின் ஆட்சியை வழிநடத்தினர். அதன் மூலம் பறம்பில் தாய்வழிச் சமூகம் நிலைபெற்றதை,*

*"பாரியின் குரலுக்கும் இதுவரை கேட்டறியாத அச்சம் இருந்தது. குல சமூகத்தில் பெண்ணின் தலைமை இடத்தை வேளிர் குலம் அப்படியே வைத்துள்ளது. எங்களின் மூதாயின் குரலுக்குக் குலமே அஞ்சும் என்றான் பாரி" (ப.138)*

*என்ற கூற்று தெளிவுறுத்துகின்றது. இந்தக் குலநாகினிகளின் ஏற்பாட்டில் தான் கொற்றவை கூத்து நிகழும்.*

*கொற்றவை கூத்து*

*பறம்பில் கொற்றவை கூத்து மிகப் பெரிய திருவிழாவாகக் கொண்டாடப்படுகின்றது. பொதுவாக கொற்றவை வெற்றியை ஈட்டித்தரும் தெய்வமாக வழிபடப்படுவதை,*

*" மறங்கடைக் கூட்டிய துடிநிலை சிறந்த*
*கொற்றவை நிலையும் அகத்திணைப் புறனே" (தொல்., பொருள், நூ59)*

*என்ற நூற்பா புலப்படுத்துகின்றது. பல்வேறு பகுதிகளில் இருந்தும் பாணர்கள் இவ்விழாவைக் காண ஒன்று திரண்டு கூடிவிடுவர். பறம்பின் பல்வேறு அடுக்குகளில் உள்ள ஊர்களின் மக்களும் ஆதிமலையில் ஒன்று கூடி விழா எடுப்பர். இது நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நிகழும் திருவிழா என்பதை,*

*"நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடக்கும் கூத்து இது. பறம்பு நாட்டின் உக்கிரம் ஏறிய விழா. நாடே திரண்டிருக்கும். பழைமையான பாணர் கூட்டம் எந்த நாட்டில் இருந்தாலும் இந்த விழாவில் வந்து பங்கெடுக்கும்" (ப.171)*

*என்ற கூற்று தெளிவுறுத்துகின்றது.*

*இரத்த பலி*

*கொற்றவை கூத்துக் காண பறம்பு மலையின் அனைத்து ஊர்களில் இருந்து புறப்பட்டுச் சென்றனர். நீலன் கபிலரை அழைத்துச் சென்ற கூட்டத்தில் திடீரென காக்காவிரிச்சி என்ற பறவை வானில் பறந்தது. அதனை அறிந்தவுடன் பழையன் அறிவுறுத்தலின் பெயரில் யாவரும் பாறையின் இடுக்குகளில் பதுங்கினர். காக்காவிரிச்சி ஒரு பருந்தைத் துரத்தி அதன் கழுத்து ரத்தத்தை உண்டபடி வானில் பறந்தது. பருந்தின் பிற பகுதிகள் காட்டில் சிதறின. காக்காவிரிச்சியிடமிருந்து யாவரும் உயிர் தப்பிய மகிழ்ச்சியில் தங்கள் பயணத்தைத் தொடர்ந்தனர். இருந்தபோதும் யாவர் மனதிலும் காக்காவிரிச்சியின் வரவு குறித்த அச்சம் இருந்தது. உடனே பழையன். 'கொற்றவை கூத்து நிகழ இருக்கும் நேரத்தில் பறவைகளின் ரத்தம் காற்றில் தூவப்படுவது நன்நிமித்தம்' என்று கூறிய அச்சூழலில் யாவரும் மனஅமைதி அடைய வழி செய்தார். கொற்றவை கூத்திற்கு முன் ரத்த பலி கொடுப்பது குறித்த நம்பிக்கை பறம்பு மக்களிடம் இருந்ததை,*

*"கொற்றவை விழாவுக்கு முன்னர் பறவைகளின் ரத்தம் காற்றில் தூவப்படுவது நல்ல நிமித்தம்" (ப.77)*

*என்ற கூற்று தெளிவுறுத்துகின்றது.*

*கொற்றவைக்கு வீரமறவர்கள், எள்கசிவும், நெற்பொரியும், அவரை துவரையும், அவலும் நிணமும் குடரும், குருதியும் ஆகியன நிறைத்து மண்டையினையும் பூதகணங்களையுமுடைய அவளுக்குப் படைத்து மகிழ்ந்ததாகவும், பகைகெட வேண்டியதாகவும் புறப்பொருள் வெண்பாமாலை சுட்டுவதை,*

*“அணங்குடை நோலை பொரி புழுக்கல் பிண்டி*
*நிணங்குடர் நெய்த்தோர் நிறைத்துக் - கணம்புகலக்*
*கைபிரிய மண்டைக் கணமோடி காவலற்கு*
*மொய்யிரியத் தான்முற் துறும்" (புறப்பொருள் வெண்பாமாலை, நூ. 40)*

*என்ற நூற்பாவால் அறியலாம்.*

*கொற்றவை கூத்தின் தொடக்கம்*

*பறம்பில் உள்ள பெரிய மரப்பொந்துதான் கொற்றவை உறையும் இடமாகக் கருதப்பட்டது. கொற்றவை கூத்தின் தொடக்கமாக மரப்பொந்தின் கீழ் பதினைந்து பழக்கூடைகள் வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். மக்கள் சுற்றி வட்டமாக அமர்ந்திருப்பர். அந்த மரத்தின் மேலிலிரு தேவவாக்கு விலங்கு இரங்கி வந்து ஏதேனும் ஒரு கூடையில் இருக்கும் பழத்தை எடுத்துச் செல்லும். எந்தக் கூடையில் இருந்து பழத்தை எடுத்துச் சென்றதோ அந்த இனத்தைச் சார்ந்த மக்கள் தங்கள் வரலாற்றைக் கூத்தாக நிகழ்த்தி சூளுரை உரைப்பதை,*

*"அவை மெல்ல இறங்கி வந்து எந்தக் கூடையில் உள்ள பழத்தை எடுத்துச் செல்கின்றவோ, அந்தக் குலப்பாடகன் தனது பாடலைப் பாடத் தொடங்குவான். பாடல் முடிந்ததும் அந்தக் குலத்தின் வழித்தோன்றல்கள் கொற்றவைக்குப் பலியிட்டுச் சூளுரைப்பர், அந்தத் தெய்வவாக்கு விலங்குகள் இறங்கி வருவதற்காகத்தான் எல்லோரும் அமைதிகொண்டு காத்திருந்தனர். சிறிதளவு ஓசையும் அசைவும் இருந்தால் கூட அவை வெளிவராது." (பக்.142-143)*
*என்ற கூற்று தெளிவுறுத்துகின்றது.*

*குலங்களுக்கான கூத்து*

*கொற்றவை கூத்து பொதுவாக பாலை நிலத்திற்கு உரிய கூத்தாகும். ஆனால் பாரியின் பறம்பு மலையில் வெகு விமர்சையாகக் கொற்றவை கூத்து நடத்தப்படுவதைக் கண்டு வியந்து கபிலர் வினவுகின்றார். அதற்கு பாரி, 'பேரரசுகளின் செயல்களால் பல்வேறு இனக்குழுக்கள் அழிவினை எய்தின அழிவுற்ற இனமக்கள் சிலர் தப்பி வந்து பறம்பில் குடியேறினர். அங்ஙனம் பறம்பில் குடியேறிய இனக்குழுக்களின் எவண்ணிக்கை பதினாறு அந்த மக்கள் தங்கள் மனதில் இருக்கும் வருதத்தை வெளிப்படுத்தும் விழா இது' என்கிறான்*

*"அழிக்கப்பட்ட குலங்கள் எண்ணிக்கையில் எத்தனையோ யாரறிவார்? ஆனால் பேரரசுகளின் கொடுத்தாக்குதலில் இருந்து தப்பி உயிர்பிழைத்தவர்கள் மிகச் சிலர். அவர்கள் எங்கெங்கோ அலைந்து திரிந்து, இறுதியில் பறம்பு நாட்டுக்கு வந்து குடியேறி உள்ளனர். மூவேந்தர்களால் அழிக்கப்பட்ட பதினாறு குலங்களின் மிச்சங்கள், இப்போது பறம்பு நாட்டில் வசிக்கின்றன. போர்த் தெய்வமான கொற்றவையிடம் முறையீட்டு ஆறாத்துயரைக் கொட்டி வஞ்சினம் உரைக்கும் விழாதான் இது" (ப.142)*
*என்ற கூற்று தெளிவுறுத்துகின்றது. அழிந்த இனக்குழுவின் மக்களைப் பறம்பின் பாரியால் மட்டுமே காக்க இயலும் என்று அவர்கள் இவ்விடம் அடைக்கலம் புகுந்ததை,*

*"நாங்கள் மட்டுமே வேந்தர்களிடம் இருந்து பாதுகாத்து அடைக்கலம் தரமுடியும் என்ற நம்பிக்கையில் அவர்கள் இங்குக் குடிபுகுந்தனர்." (ப.142)*
*என்ற கூற்று புலப்படுத்துகின்றது.*

*வழிபாட்டின் பொழுது விளக்கேற்றுதல்*

*கொற்றவை கூத்து நிகழும் பொழுது தேவவாக்கு விலங்கிற்காக பதினைந்து கூடைகளில் பழங்களை வைத்துக் காத்திருப்பர். தேவவாக்கு விலங்கு வந்து ஒரு கூடையில் உள்ள பழத்தை எடுக்கும். உடனே குலநாகினிகள் விளக்கு ஏற்றி கூத்தைத் தொடங்குவர். தேவவாக்கு விலங்கு என்பது மிகுந்த அச்சம் கொண்ட விலங்கு. மனிதர்களின் சிறு அசைவை உணர்ந்தால் கூட அஞ்சி ஓடிவிடும். கொற்றவை கூத்தின் பொழுது தேவவாக்கு விலங்கு கூடையில் உள்ள பழத்தை எடுக்கும் பொழுது சிறு அசைவு கூட இல்லாது இருப்பர். அது இறங்கி வந்து பழத்தை எடுத்து ஓடிச் சென்றால் ஒரு விளக்கு ஏற்றுவர். தேவவாக்கு விலங்கு பழத்தை எடுத்துக் கொண்டு திரும்பாமல் பின்னால் நடந்து சென்று பொந்துக்குள் நுழைந்தால் இரண்டு விளக்குகள் ஏற்ற வேண்டும் என்று பறம்பின் வழக்கமாக இருந்ததை,*

*“பழம் எடுத்ததும், சில நேரம் திரும்பி நடந்து மரக்கிளையின் மீது ஏறும். சில நேரம் யாரும் தன்னை நெருங்கிவிடுவார்களோ என்ற அச்சத்தால் முன்பக்கம் பார்த்தபடியே கால்களைப் பின்னால் நகர்த்திப்போகும். இந்தமுறை அப்படித்தான் போனது. அது பின்னால் நடந்து போனால் இரட்டை விளக்கு ஏற்றப்பட வேண்டும் எ;னபது வழக்கம்” (ப.162)*
*என்ற கூற்று தெளிவுறுத்துகின்றது.*

*தேவவாக்கு விலங்கிற்குக் காவல்*

*தேவவாக்கு விலங்கு கொற்றவை உறைவதாகச் சொல்லப்பட்ட ஒரு மரத்தில் மட்டுமே வசித்து வந்தது. பிற மரங்களில் சென்று தங்காது. வேட்டையாடக் கூடிய விலங்குகள் தேவவாக்கு விலங்கை வேட்டையாட மிகவும் விரும்பும். ஆகவே பறம்பில் தேவவாக்கு விலங்கு தங்கியிருக்கும் மரத்தைச் சுற்றி சற்று தொலைவில் பல காவல் குடிசைகளை அமைத்திருந்தனர். அழிந்து வரக்கூடிய இனமாகிய தேவவாக்கு விலங்கை பறம்பு மக்கள் பாதுகாத்த தன்மையினை,*

*“இந்த இடம் தவிர வேறு எங்கேயும் இந்த விலங்கைப் பார்க்க முடியாது. இந்த விலங்கு, வேட்டை விலங்குகளுக்கு மிகவும் பிடித்த உணவு. இந்த மரப் புதருக்குள் நுழைந்து இதை எப்படியாவது தின்றுவிட அவை முயல்கின்றன. அதனால் தான் இதைப் பாதுகாக்கக் காவற்குடிகள் இங்கு இருக்கின்றனர்.” (ப.163)*

*என்ற கூற்று புலப்படுத்துகின்றது.*

*முடிவுரை*

*சங்க இலக்கியங்கள், நீதி இலக்கியங்கள், காப்பிய இலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள் என காலத்திற்கேற்ப மாற்றம் பெறும் அத்துணை இலக்கியங்களிலும் கொற்றவையை வழிபடும் தன்மைகள் விளக்கப்பட்டுள்ளன. கொற்றவை கூத்து நிகழும் முறைகள் குறித்து வேள்பாரி புதினம் மிகத் தெளிவாக விளக்கியுள்ளது. வயதில் மூத்த குலநாகினிகள் கொற்றவை கூத்தை நிகழ்த்துகின்றனர். இனக்குழு வாழ்வில் அழிவின் விழிம்பினை எட்டிய குலங்கள் தங்கள் குலத்தின் அழிவிற்குக் காரணமானவர்களை அழிக்க கொற்றவை முன் சூளுரை மேற்கொள்வது கொற்றவை கூத்தின் முக்கிய அங்கமாக அமைகின்றது. ஒவ்வொரு இனக்குழுக்களும் தங்கள் வாழ்வின் நிலைப்பாட்டினை கொற்றவை கூத்தில் நினைவு கொள்கின்றனர்.*

*துணைநூற்பட்டியல்*

*1. இளம்பூரணர் (உ.ஆ.), தொல்காப்பியம், சாரதா பதிப்பகம், சென்னை, 2017*

*2. திருஞானசம்பந்தன் (உ.ஆ.), புறப்பொருள் வெண்பாமாலை, கதிர் பதிப்பகம், சென்னை, 2012*

*3. வெங்கடேசன், சு., வீரயுக நாயகன் வேள்பாரி, விகடன் பிரசுரம், சென்னை, 2019.*

********* ********* ********** ********* ********* ********** ********** **********